
# கீதாசார்யன் - 12

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்



"कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन।"

தொகுதி 1 | ஸித்தார்த்தி ௵ | புரட். மீ | செப். 79 | பகுதி 12




ஆசிரியர்

M. A. வேங்கடகிருஷ்ணன், M. A.

P. T. சுந்தர வரதன்
நிதிக் காப்பாளர்

N. கணபதி
விளம்பரப் பொறுப்பாளர்

7, தெற்கு மாட வீதி.

திருவல்லிக்கேணி : சென்னை-600005.

ஆண்டுச் சந்தா ரூ 10

விலை ரூ. 1-00

# ஸ்ரீமத் பகவத்கீதை

ஸஞ்சய உவாச

ஸஞ்சயன் சொல்கிறான்

**ஏவமுக்தோ ஹ்ருஷீகேசோ குடாகேசேந பாரத**
**ஸேநயோ ருபயோர்மத்யே ஸ்த்தாபயித்வா ரதோத்தமம் (24)**

பரதகுலத்திலுதித்த திருதராஷ்டிரனே! கண்ணன் இவ்வாறு அர்ச்சுனனால் கூறப்பட்டவனாய் இரண்டு சேனைகளுக்கும் இடையில் தேரைக் கொண்டு நிறுத்தினான்.

**பீஷ்மத்ரோணப்ரமுகத: ஸர்வேஷாம்ச மஹீக்ஷிதாம்**
**உவாச பார்த்த பச்யைதாங் ஸமவேதாங் குருநிதி (25)**

பீஷ்மனர், துரோணர் மற்றுமுள்ள அரசர்கள் முன்னிலையில் (கண்ணன் அர்ஜுனனுடைய தேரை நிறுத்தி) 'பார்த்தா! போர் புரியக் குழுமியுள்ள குருவம்சத்துதித்த துரியோதனாதியர்களைப் பார்" என்று கூறினான்.

**தத்ராபச்யத் ஸ்த்திதாங்பார்த்த : பித்ருநத பிதாமஹாங்**
**ஆசார்யாங் மாதுலாங் ப்ராத்ருங் புத்ராங் பௌத்ராங்**
**ஸகீம்ஸ்ததா (26)**
**ச்வசுராங் ஸுஹ்ருதச்சைவ ஸேநயோருபயோரபி**

பிறகு அர்ச்சுனன் அங்கு இரண்டு சேனைகளிலும் இருக்கும் தந்தை ஸ்தானத்திலுள்ளவர்களையும், பாட்டனார்களையும், ஆசார்யர்களையும், மாமன்மார்களையும், அண்ணன் தம்பிகளையும், பிள்ளை—பேரன் ஸ்தானத்திலுள்ளவர்களையும் மாமனார் ஸ்தானத்திலுள்ளவர்களையும நண்பர்களையும் கண்டான்.

**தாங்ஸமீக்ஷ்ய ஸ கௌந்தேய : ஸர்வாங்**
**பந்தூநவஸ்த்திதாங் (27)**
**க்ருபயாபரயாவிஷ்டோ விஷீதந்நிதமப்ரவீத்**

சேனைகளிடையே நிற்கும் அவ்வுறவினர்களைக் கண்ட அர்ச்சுனன், கருணையால் துன்புற்றவனாய் பின்வருமாறு சொன்னான்.

# திருவிட வெந்தை

## T. A. பாஷ்யம்

**பார்த்தன் :** கண்ணு சென்ற மாதம் நாம் ஒரே நாளில் திருநின்றவூர், திருவெவ்வுளூர், திருநீர்மலை ஆகிய மூன்று திவ்ய தேசங்களை ஸேவித்தோம். இன்று ஞாயிற்றுக் கிழமை யாய் இருக்கிறது. இன்று ஏதாவது சில திவ்யதேசங்களை ஸேவிப்போமே ! சென்னைக்கு மிக அருகில் இன்னும் ஏதாவது திவ்யதேசங்கள் இருக்கின்றனவா ?

**கண்ணன் :** பார்த்தா, உன் ஆவலை நான் பாராட்டு கிறேன். விடுமுறை தினங்களை இப்படி நல்ல முறையில் கழித் தால் நல்லகதி நிச்சயமாக கிடைக்கும். இன்று நாம் திருவிட வெந்தை திருக்கடன் மல்லை ஆகிய இரு திவ்ய தேசங்களை ஸேவிக்கலாம். திருவிட வெந்தை, சென்னை—மஹாபலிபுரம் (மாமல்லபுரம்) பஸ் மார்க்கத்தில், புகழ் மிக்க கோவளத்திற்கு அடுத்த சிற்றூர். பிற ஊர்களிலிருந்து செல்வோர் செங்கற் பட்டு—திருக்கழுக்குன்றம் வழியாக மஹாபலிபுரம் போய் அங்கிருந்து இத்திருவிட வெந்தைக்கு வரலாம்.

**பார்த்தன் :** திருவிட வெந்தை திவ்யதேச மகிமையைப் பேசிக் கொண்டே நாம் பஸ்ஸில் செல்லலாமே !

**கண்ணன் :** நன்று. காலவ மஹரிஷி என்பவருக்கு ஒரு கன்னிகையின் மூலம் பெரிய பிராட்டியாரின் அம்சமாக 360 பெண்கள் தோன்றினர்கள். அவர் தமது குமாரத்திகளுடன் பகவான் வராஹ ரூபியாய் எழுந்தருளியிருக்கும் வாமகவி புரியை அடைந்து வசிக்கலானர். வராஹப் பெருமான் ஒரு பிரம்மசாரி வடிவில், காலவரிஷியிடம் வர, அவரும் தமது 360 திருக்குமாரத்திகளையும் கல்யாணம் செய்து கொள்ளும்படி

பிரார்த்திக்க, எம்பெருமானும் தினம் ஒரு கன்னிகையாக ஒரு வருஷம் கல்யாணம் செய்து கொண்டு கடைசி நாளன்று எல்லாக் கன்னிகைகளையும் ஒன்ருக (ஒரு கன்னிகையாக) சேர்த்து தமது இடப்பக்கத்தில் வைத்துக் கொண்டு ஞானோப தேசம் செய்தார். தினம் ஒரு கல்யாணமாகச் செய்து கொண்டபடியால் பெருமாளுக்கு **நித்ய கல்யாணர்** என்ற பெயரும், 360 கன்னிகைகள் ஒன்ருகச் சேர்ந்த படியால் தாயாருக்கு **அகில வல்லி நாச்சியார்** என்ற பெயரும் ஏற் பட்டது.

**பார்த்தன் :** ஆச்சர்யமான வ்ருத்தாந்தமாய் உள்ளதே. ஊரின் பெயர்க் காரணம், ஆழ்வார் பாடல், மற்றுமுள்ள சிறப்புகளையும் தெரிவிக்கிருயா ?

**கண்ணன் :** ஆழ்வார் பாடல் பெற்ற 108 தலங்களுள் பெருமாள் வராக மூர்த்தியாய் ஸேவை ஸாதிப்பது இந்த ஒரு திவ்யதேசத்தில் மட்டுமே. பிராட்டியை இடதுபக்கத்தில் வைத்துக் கொண்டு எம்பெருமான் ஸேவை ஸாதிப்பதால் **திரு இட எந்தை** எனப்படுகிருன். அதுவே ஊருக்கும் பெய ராயிற்று. பெரிய திருமொழி (2–7) "திவளும் வெண்மதி போல" என்ற பதிகத்தாலும், மற்றும் ஆங்காங்கே பல பாசுரங் களாலும், சிறிய திருமடல், பெரிய திருமடல்களிலும் திரு மங்கையாழ்வார் இவ்வெம்பெருமானைப் பாடியுள்ளார். இதோ இது தான் நாம் செல்ல வேண்டிய திருவிட வெந்தை. இவ் பஸ்ஸை விட்டு இறங்கி கோயிலுக்குச் செல்வோம் வா.

**பார்த்தன் :** ஆஹா. மிகவும் ரமணீயமான சூழ்நிலையில் இந்த ஊர் அமைந்துள்ளதே! ஒருபக்கம் கடற்கரையும், சவுக்குத் தோப்புகளும், சோலைகளும், மிகச் சிறிய புஷ்கரிணி யும், சிறிய சன்னிதி வீதியும், 16 கால் மண்டபமும் அழகான கோயிலுமாக அமைந்துள்ளதே. இந்த சன்னிதிக்கு கோபுரம் கூட இல்லையே.

**கண்ணன் :** பார்த்தா. ஸன்னிதி மிகவும் புராதன மானது. வைகாஸை ஆகமப்படி திருவாராதனம் நடை பெற்று வருகின்றது. இது சென்னை—மாமல்லபுரம் பிரதான சாலையில் அமைந்திருந்தாலும் இங்கு வரும் யாத்ரீகர்கள் குறைவு தான். அனேகம் பேருக்கு இந்த ஸன்னிதியைப் பற்றி அறிய வாய்ப்பில்லை. அர்ச்சகர்கள் காலை விசுவரூபம் ஆரம்பித்து இரவு அரவணை வரை யார் எப்போது வந்து கூப் பிட்டாலும் ஸன்னிதி திருக்காப்பினை நீக்கி ஸேவை செய்து வைக்கின்றனர். எம்பெருமான் அவ்வளவு பரம சுலபனாக இங்கு ஸேவை தருகின்றான். இதோ இங்கே உள்ள கல்வெட் டினைப் பார். கல்வெட்டின் படி இந்த ஊருக்கு அசுரகுல கால நல்லூர் என்ற மற்றொரு பெயரும் உண்டு என்று தெரிய வரு கின்றது. இனி ஸன்னிதியை ப்ரதக்ஷிணமாகச் சென்று தாயா ரையும் ஸேவிப்போம், வா. இதுதான் தாயார் ஸன்னிதி. எம்பெருமான் மணந்து கொண்ட 360 கன்னிகைகளுள் முதல் கன்னிகை கோமளவல்லி ஆதலால் இந்த தனிக்கோயில் நாச்சி யாருக்குக் கோமளவல்லி என்றே திருநாமம். திருமங்கை ஆழ்வார் தமது பதிகத்தில் இந்தத் தாயாரை "குலங்கெழு கொல்லிக் கோமளவல்லி" என மங்களாசாஸனம் செய்துள் ளார். இந்தப் பக்கம் ஆண்டாள் சன்னிதியை சேவிப்பாய். இனி இப்படியே ப்ரதக்ஷிணமாக வந்து பிரதான ஸன்னிதிக்கு வடகிழக்கு மூலைப்பகுதியில் உள்ள ஸ்ரீரங்க நாயகி ஸ்ரீரங்க நாதன் ஸன்னிதியை ஸேவித்து விட்டு ப்ரதான ஸன்னிதியை அடையலாம் வா.

**பார்த்தன் :** கண்ணா இங்கே பார்த்தாயா. இந்த ஸ்தலத்து பாசுரங்களை கல்வெட்டில் பதித்துள்ளனர். பாமர ரும் அனுஸந்தானம் செய்யலாம் அல்லவா. இந்த முன் மண்ட பத்திலிருந்தே வராஹப் பெருமாள் ஆச்சரியமாய் ஸேவை தருகின்றானே !

ஸ்ரீராமாநுஜர் அருளிச் செய்த

# ஸ்ரீ பாஷ்யம்

தமிழாக்கம்: கு. சந்தானம்

மீண்டும் மீண்டும் வேத வாக்கியங்களை உருப்போடுவதால் ஏற்படும் மனப்பக்குவமே அத்யயனமாகும். திரும்பத் திரும்ப ஓத வேண்டும் என்பது வேதமோதும் கர்மமாகும். மனப் பக்குவமாவது மற்ற காரியங்களுக்குத் தகுதி வருவது. அவ் வித மனப்பக்குவம் மனப்பாடத்தால் உண்டாவது நியாயமே. தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்ற நான்கு புருஷார்த் தங்களை அறிவிப்பதாலும், ஜபம் முதலியவற்றாலும், தன் னுடைய ஸ்வரூபத்தாலும் அவற்றையடையும் சாதனமா கிறது. இவ்வித அத்யயன விதியானது மந்த்ர மூலமாகவும் நியமத்தாலும், வேத வாக்கியங்களின் மனப்பாடத்தில் முடிவடைகிறது.

அத்யயனத்தால் உண்டான மனப்பாடம் ஸ்வபாவத் தாலே பலனைக் கொடுப்பதோடு அவற்றின் அர்த்தங்களையும் விளக்குவதைக் காண்கிறோம். வேத மனப்பாடத்தால் பல னுள்ள பொருள்கள் தோன்றுவதால் அவற்றின் ஸ்வரூபங்களை யும் தன்மைகளையும் தெளிவாக உணர்ந்து பலன் பெற வேத வாக்ய ஆராய்ச்சியான மீமாம்ஸையைக் கேட்டறிவதில், வேத பாடம் செய்தவன் தானகவே முற்படுகிறான். அப்பொழுது கர்ம விதிகளின் ஸ்வரூபங்கள் நன்கு விளங்கும் பொழுது, கர்மங்களின் அல்பமான, நிலையற்ற பலன்களைக் கண்டு, அத்யயனம் செய்யும் பொழுது மனப்பாடமான வேத வாக்கி யங்களில் ஒரு பாகமான உபநிஷத் வாக்கியங்களில், அழியாத, எல்லையற்ற பலன்கள் தோன்றுவதால், அவற்றை நன்கு நிர்ண யிக்க வேண்டும் என்ற ஆவலால் வேதாந்த வாக்கியங்களின் ஆராய்ச்சியான சாரீரக (ஆத்ம) மீமாம்ஸையைக் கற்க தகுதி உண்டாகிறது. அவ்வாறே வேதாந்த வாக்கியங்கள் வெறும்

கர்மங்களின் பலன்களின் அழியும் தன்மையையும் பிரம்ம ஞானத்தின் அழியாப் பலன்களையும் காட்டுகின்றன.

(1) 'இவ்வுலகில் கர்மத்தின் பலன்கள் அழிவதைப் போலவே, மறுமையிலும் புண்ணியத்தின் பலன்களும் அழிகின்றன. (சாந்தோக்யம்)

(2) 'இதன் பலன் முடிவுள்ளதே' (ப்ருஹதாரண்யகம்)

(3) 'நித்தியமல்லாத வழிகளால் அதை அடையலாகாது' (கடோபநிஷத்)

(4) 'யக்ஞ (வேள்வி) ரூபமான படகுகள் நம்பத்தகுந்தவைகளல்ல' (முண்டகம்)

(5) கர்மத்தால் நிறைந்த உலகங்களை நன்கு ஆராய்ந்து பிராம்மணன் நம்பிக்கையிழந்து துயரப்படுவான்; எது செய்தாலும் பிரயோஜனமில்லை என்று உணர்வான். ஆதலால் பரஞானத்திற்காக பணிவுடன் கையில் ஸமித்தை (யாகத்தில் தீயிலிடும் குச்சி) ஏற்று, வேதமோதிய, பிரம்மஞானத்தை அடைந்த குருவை நாடுவான். அவ்வறிஞன், தன்னையடைந்த பூர்ணமான அமைதி பெற்ற, சாந்த குணமுள்ள சீடனுக்கு பிரம்ம வித்தையை உண்மையாக முழுமையையும் போதிப்பான். (முண்டகோபநிஷத்)

(6) 'ப்ரம்மத்தையறிந்தவனே உத்தமநிலை எய்துவான் (தைத்திரீயம்).

(7) அந்த பிரம்மத்தை வளர்ப்பவனுக்கு மீண்டும் சாவில்லை.

(8) அதனைக் காணுதவன் சாவைக் காண்கிறான் (சாந்தோ)

(9) அவன் (ப்ரஹ்மத்தை யறிந்தவன்) தனிச் சக்ரவர்த்தி ஆகிறான். (சாந்தோ)

(10) இவ்விதம் அதனை (ப்ரம்மத்தை) அறிந்தவன் அமரனாகிறான். (புருஷ ஸூக்தம்)

(11) தனியாக அனைத்தையும் தாண்டுவோனை அறிந்து, நிறைவு பெற்று, அமரநிலையடைவான முதலியன.

அங்கங்களுடன் வேதத்தை மனப்பாடம் செய்வதாலேயே கர்மங்களின் பலன்கள் சுவர்க்கம் முதலியன. என்றும், அந்த சுவர்க்கம் முதலிய பலன்கள் அழிவன வென்றும் அறியப் படுகின்றன. 'அதன் பிறகு பிரம்ம ஆராய்ச்சி ஆரம்பமாக லாமே. கர்மங்களின் ஆராய்ச்சி எதற்காக ?'— இது சரியான வாதமானால், சாரீரக மீமாம்ஸையைக் கூடத் தொடங்க வேண்டியதில்லை. என்னலாமே.

அங்கங்களுடன் வேதாத்யயனம் செய்வதாலேயே அனைத்தும் அறியப்படுவதால், ஒரளவு பிரம்ம ஞானத்தின் அழியாத பலன் புலப்பட்ட போதிலும், முறைப்படி வாக்யெங்களின் அர்த்தத்தை நிர்ணயம் செய்ய வேண்டியிருப்பதாலும், மேல் வாரியாக புலப்படும் அர்த்தங்களின் ஸந்தேஹங்களையும், மாற்று அர்த்தங்களையும் தீர்க்க வேண்டுமே. இதற்காக வேதாந்த வாக்யெங்களின் ஆராய்ச்சி செய்வது அவசியமே என்றால், அதே காரணத்தால் தர்மங்களின் ஆராய்ச்சியும் அவசியம்' என்று ஏற்க வேண்டும்.

(தொடரும்)

கீதாசார்யன் சந்தா விவரம்
ஆயுள் சந்தா ரூ. 100
ஆண்டுச் சந்தா ரூ. 10

# திருவாய்மொழியும் த்வயமும்

திருமாலைக்கைதொழுவர் (முதல் திருவந்தாதி 52) அடியாரைச் சேர்தல் தீர்க்கும் திருமாலை (திருவாய்மொழி 1-5-7) என்றபடியே புருஷகாரம் ஐஸ்வர்ய கைவல்ய ரூப ப்ரயோஜநாந்தரங்களைக் கொண்டகலாதே, அவற்றை யொழித்து, ஒண்டொடியாள் திருமகளும் அவனுமான சேர்த்தியில் அடிமையே பேறென்று கீழ்சொன்ன உபாயபலத்தைக் காட்டுகிறது உத்தரவாக்யம். உத்தர வாக்யத்தாலே ப்ராப்யம் சொல்லுகிறது. ப்ராப்யாந் தரத்துக்கன்று என்றபடி. பூர்வவாக்யத்தில் கூறப்பட்ட பல சதுஷ்டய ஸாதாரணமாகையாலே, கீழ்ப்பண்ணின

வேளுக்குடி K. வரதாசாரியர்

உபாயவரணம் ப்ராப்யாந்தரத்துக்கன்று என்னுமிடம் சொல்லுகை, இப்போது ப்ராப்யம் சொல்லுகிற இதுக்கு ப்ரயோஜ மென்றபடி. உபாயாந்தரங்களை விட்டுச் சரமோபாயத்தைப் பற்றினாப்போலே, உபயாந்தரங்களை விட்டு எல்லையான ப்ராப்யத்தை அர்த்திக்கிறது. அதாவது—உபாய வரணம் பண்ணுகிறவளவில், அநந்யஶரணத்வ ரூபமான ஸ்வரூபத்துக்கநுகுணமாக கர்மஜ்ஞாந பக்திகளாகிற உபாயாந்தரங்களை விட்டுச், சரமமான ஸித்தோபாயத்தைப் பற்றினாப்போலே.

உபேயப்ரார்த்தனை பண்ணுகிறவளவிலும் அநந்ய போகத்வரூபமான ஐஸ்வர்ய கைவல்யங்களைவிட்டுச் சரமமான ப்ராப்யத்தை அர்த்திக்கிறது என்கை. உபாயதயா வரணமும் உபேயதயாவரணமுமிறே இரண்டுக்கும் க்ருத்யம். உபேயத்

வேத வரித்தபோது உபாயாபேக்ஷையுண்டு. உபாத்யவேத வரித்தபோது உபேயாபேக்ஷையுண்டு. ஆகையால் உபயமும் அபேக்ஷிதமாகக் கடவது. உபேயத்வ வரணமாவது—ஈச்வரன் திருவடிகளிலே கைங்கர்யத்தையே உபேயமாக அத்யவஸிக்கை. உபாயவத்வ வரணமாவது அவன் திருவடிகளை உபாயமாக அத்யவஸிக்கை. அத்யவாஸத்வயமும் இவ்வதிகாரிக்கு அபேக்ஷிதம். அநந்ய ஸாதநத்வஸித்திக்கு உபாயாத்யவஸாயம் வேணும். அநந்யபோகத்வஸித்திக்கு உபேயாத்யவஸாயம் வேணும். உபாயவிரோஷாத்யவஸாயம் ப்ரயோஜ நாந்தர பரனுக்கும் உண்டாகையாலே தத்வ்யாவ்ருத்திஸித்திக்கு உபேயாத்யவஸாயம் வேணும். ஸாதக (உபாஸக)னுக்கும் "இஷ்டம்மநிஷாண அமும்மநிஷாண — ஸர்வம்மநிஷாண" என்கிறபடியே உபேயாத்யவாஸம் உண்டாகையாலே தத்வ்யாவ்ருத்திஸித்திக்கு உபாயாத்யவஸாயம் வேணும்.

உபாயாந்தரங்களிலும் துவக்கற்றவன் இம்மந்த்ரத்துக்குப் பூர்ணாதிகாரி. உத்தர வாக்யாநுஸந்தாநம் இல்லாத போது பகவதேக ஸாத்யத்வ லாபமில்லை. பூர்வ வாக்யாநுஸந்தாநமில்லாதபோது பகவதேக ஸாதநத்வலாபமில்லை. உத்தர வாக்யாநுஸந்தாநம் ஸாதகனுக்கும் ஸாதாரணமாயிருக்கும். பூர்வ வாக்யாநு ஸந்தாநம் ஐச்வர்ய கைவல்யபர அதிகாரி த்வய ஸாதாரணமாயிருக்கும். ஆகையாலே உபயாநுஸந்தான முண்டானாலாய்த்து அதிகாரி த்ரய வ்யாவ்ருத்தியு முண்டாவது. வாக்யத்வயத்திலும் கூறப்படுகிற ஸாதந ஸாத்யங்களை யொழிந்த இதர ஸாதந ஸாத்யங்களிரண்டுக்கும் ஸ்வரூப அநநு ரூபத்வம் அவிசிஷ்டமாயிருக்கு மாகையாலே அவை த்யாஜ்யங்களாகக் கடவன. இவை இவனுக்கு ஸ்வரூபத்துக்கநுருபங்களா யிருக்கையாலே அத்யந்தமு பாதேயமாகக் கடவது. ஸ்வருபாநு ருபமா யிருக்கிற இந்த உபாயோபேயங்களிறே வேத தாத்பர்ய விஷயம். "அந்தரிக்ஷகத : ஸ்ரீமாந" "ஸது நாகவர : ஸ்ரீமாந்" என்கிற படியே

உபாயோபேயாத்யவஸாயங்களாகிற மஹைச்வர்யம் இவ் வதிகாரிக்கு அபேக்ஷிதம். அத்தைப்பற்றவிறே "முமுக்ஷுர் வை ஶரணமஹம் ப்ரபத்யே" என்று ஶ்ருதமாயிற்றதும் என்றபடி.

முமுக்ஷு ஶப்தத்தாலே உபேயாந்தர வைராக்யமும் ஶரணம் ப்ரபத்யே என்றத்தாலே உபாயாந்தர வைராக்யமும் கூறப்பட்டதிறே. "ஸ்ரீமதே நாராயணாய நம:" என்றவிது சேதநன் ஈச்வரனுக்குக் கூறும் "மாசுச:" ஆகவிருக்கும் அதாவது :— "இவன் நம்மை உபாயமாகப் பற்றி ப்ரயோஜநாந்தரங்களைக் கொண்டு போகிறானாகாதே" என்று ஈச்வர ஹ்ருதயம் கடல் கலங்கினாப் போலே கலங்கும். உத்தர வாக்யத்தாலே "உன்னையே உபாயமாகப் பற்றி ப்ரயோஜநாந்தரங்களைக் கொண்டு போவனொருவனல்லேன் நான். தேவரீர் திருவடிகளிலே தேவரீர் திருவுள்ள உகப்புக்காகவே அகில கைங்கர்யங்களையும் செய்யப் பெறுவேனாக வேணும்" என்றவாறே இவன் பாசுரம் கேட்டு அவன் திருவுள்ளம் தெளியும் ஹ்ருஷ்டமாம். கீதாசார்யனுடைய "மாசுச:" என்ற வார்த்தை கேட்டு பார்த்தன் தெளிந்தான். "உன்னை நான் பிடித்தேன் கொள் சிக்கெனவே" என்ற ஆழ்வார் திருவாக்குக் கேட்டு பகவான் நிவ்ருத்த சோகனானான். இது ஆழ்வாருடைய மாசுச: என்றருளிச் செய்தார் ஸ்வாமி நம்பிள்ளை. அப்படியே சேதநனனும் உத்தர வாக்யத்தாலே ஈச்வரனுடைய கண்ணீரைத் துடைக்கிறான் என்றபடி.

"தாவதார்த்தி: ததாவஞ்சா தாவந்மோஹ ததாஸுகம் என்கிறது ஸ்ரீவிஷ்ணு புராணம். இதிலே கூறப்பட்ட சரணாகதி ஆர்த்தாதிகளான சதுர்விதாதிகாரிகளுக்கும் ஸாதாரணமாகையாலும் "ததந்ய: கோமஹோதார:" என்கிறபடியே பரமோதாரனான சரண்யன் அர்த்திதார்த்த பரிதாநதீக்ஷிதனாய்க் "கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல்லாம் தரும்" என்றபடி நிற்கையாலும் இங்கு என்ன பலத்துக்காக

ப்ரபத்தி பண்ணுகிறதென்கிற அபேக்ஷையிலே மஹோதாரனை சரண்யனுக்கும் ஸர்வோத்க்ருஷ்ட விஷயமான இப்ரபத்திக்கும் சேஷதைகரஸனை தன் ஸ்வரூபத்துக்கும் அநுரூபமான பல விசேஷத்தை உத்தரவாக்யம் "தனக்கேயாக எனைக் கொள்ளுமீதே" என்கிறபடியே விரோதி நிவ்ருத்தி பர்யந்தமாகப் பிரார்த்திக்கிறது. இத்தால் அநந்ய ப்ரயோஜநத்வமும் ஸித்திக்கிறது. ஐஸ்வர்ய கைவல்யாதிகளைப் போலே அல்பமன்றிக்கே நிரதிசயமாய் அஸ்திரமன்றிக்கே நித்யமுமாய், ஸ்வரூபத்துக்கநுரூபமன்றிக்கே ஸ்வரூபாநுரூபமாய் புநராவ்ருத்தியின்றிக்கே அபுநராவ்ருத்தமாய் உள்ள பரார்த்த பகவதநுபவ கைங்கர்யத்தைப் பிரார்த்திக்கிறது உத்தர வாக்யம் என்றபடி. இனி யிவ்விஷயத்தை ஸாரஸங்க்ரஹத்தின்படி யநுபவிப்போம். (தொடரும்)

Grams GHEE Phone: 23092

AIM AT PERFECTION IN EVERYTHING
—*Chesterfiled*

# PERUMAL & CO.,

142, AUDIAPPA NAICKEN STREET,
MADRAS - 600 001.
(Near Kothawal Market)

**Butter, Ghee and Oils, For Purity, Quality and Taste, Fixed Price and Standard Quality**
**We Served you for 45 Years**
**We Solicit your Co-operation to Serve you better in future**

BUY "PADMA COFFEE" FOR FLAVOUR & TASTE

# திருவிடந்தை

**வராஹக்ஷேத்திரம்:** தமிழ்நாட்டில் வராஹப் பெருமான் எழுந்தருளியுள்ள இடங்கள் மிகக் குறைவு. ஸ்ரீமுஷ்ணம் என்னும் ஊரில் வராஹப் பெருமான் எழுந்தருளி இருக்கிறார். திருமலையில் (திருப்பதி மலையில்) வராஹப் பெருமாள் ஸேவை ஸாதிக்கிறார். திருக்கடல் மல்லையில் (மாமல்லபுரத்தில்) வராஹப் பெருமாள் இருக்கிறார். இவ்வூரில் (திருவிடந்தையில்) வராஹப் பெருமாள் எழுந்தருளி இருக்கிறார். இரண்யாக்ஷனைக் கொண்டு பூமியை மீட்பதற்காகவே ஸ்ரீமந்நாராயணன் வராஹாவதாரத்தை மேற்கொண்டான். வராஹப்பெருமான் இடக்கரத்தில் பிராட்டியை ஏந்திக் கொண்டு நின்ற திருக்

## ஸ்தலசயனத்துறைவார்

கோலத்தில் காட்சியளிக்கிறார். ஆதலால், இப்பெருமானுக்கு 'இடவெந்தை பிரான்' என்று திருநாமம் ஏற்பட்டது. திருமங்கையாழ்வாரே இவருக்கு இப்பெயரிட்டார். இந்த எம்பெருமானின் பெயரே, இவனிருக்கும் ஊருக்கும் நிலைத்துவிட்டது. திருவிடவெந்தை என்பது நாளடைவில் திருவிடந்தை என்றாயிற்று.

**இடம்பிடிக்கும் பெருமாள்:** உலகில் மக்களுக்குப் பலவகையில் ஆற்றல் காணப்படுகின்றன. சிலருக்குப் பேச்சில் திறன்; சிலருக்குச் செயலில் திறன்; எம்பெருமான்களுள் இடம் பிடிப்பதில் வல்லவர் இப்பெருமான். கல்யாணக் கோலத்தில் எழுந்தருளி இருக்கும் இந்த எம்பெருமான் அமைதி நிரம்பிய ஏகாந்தமான இடத்தில் வாழ

விரும்பினர். பூமிப் பிராட்டிக்காகவே வராஹாவதாரம் கொண்டபடியால், பிராட்டியை விட்டுப் பிரியாமல் இருக்க எண்ணினர். அதற்காகவே கடற் கரையிலுள்ள சிறு கிராமத்தை (திருவிடந்தையை)த் தேடிப் பிடித்தாரோ ! ஆம் ! திருவிடந்தை அவனுடைய திருவுள்ளத்திற்கு ஏற்றதாகவே அமைந்திருக்கிறது. அவரை நினைப்பவர்களின் உள்ளத்திலே அவர் நிலையாக விரும்பி வாழ்வார். திருமங்கையாழ்வாரின் உள்ளத்தை நிலையான இருப்பிடமாகக் கொண்டார் 'பிராப் திக்கு உபாயம் அவன் நினைவு' என்கிற அழகிய அர்த்தத்தைக் காட்ட பிள்ளை லோகாசாரியர் இடவெந்தை எம்பெருமானைப் பிடித்தார். இவ்வாறு அர்ச்சாவதாரத்தில் ஊற்றமுடைய திருமங்கையாழ்வாரின் திருவுள்ளத்தையும், ரஹஸ்ய கிரந்தங்களை அருளி வாழ்வித்த உலகாரியன் திருவுள்ளத்தையும் ரஹஸ்யமாய் வாழுமிடமாகப் பிடித்தபடியால் எல்லோருடைய உள்ளத்திலும் அவாவி உறைகின்ருன். எவ்வளவு சுலபமாக இடங்களைப் பிடித்து விட்டான் பாருங்கள்

எங்கே காணலாம் ? : சிலருக்கு வதரி யாத்திரை செல்லுவதில் ஊக்கம் ! பலருக்குச் செல்ல முடியவில்லையே என்ற ஏக்கம் ! தென்னுட்டிலுள்ள பலர் தென்னுட்டிலுள்ள எல்லா திவ்ய தேசங்களுக்கும் சென்றதில்லை. திருவிடந்தை, மாமல்லபுரம் செல்லும் வழியில் இருக்கிறது சென்னையிலிருந்து ஒருமணி நேரத்தில் செல்லலாம். இவ்வூருக்குச் செல்ல இயலாதபடியும் முன்பு இருந்தது இப்போது எளிதில் செல்லலாம் அப்படி இருந்தும 'கிடைத்தற்கு அரிய பயனுகவே திருவிடந்தை எம்பெருமானின் ஸேவையை நினைக்கிருர்கள் ! இந்த எம்பெருமான் நம்மை விட்டு வெகு தொலைவில் இருக்கிருனு? இல்லை. நம்மோடு ஒட்டி வாழ்ந்து நமக்கு அருள் புரியவே அவன் நினைக்கிருன் ; நாம்தான் அவனை விட்டு வெகு தொலைவில் இருக்கிறோம். திருமங்கையாழ்வார் திருவேங்கடமுடையானை ஸேவிக்கிருர். 'இவனே தேவாதிதேவன் ! நம்முடைய நன்மைக்காகவன்றே இறையும் அகலகில்லேன்'

என்ற பிராட்டியை விட்டுப் பிரியாமல் இருக்கிறன்! இந்தச் சேர்த்தியிலன்றோ நாம் தொண்டு செய்ய வேண்டும்!' என்று நினைத்தார். நாம் இனிமேல் ஸேவிக்கப்போகும் திவ்ய தேசங்களுள், பிராட்டியோடு சேர்ந்து எழுந்தருளி இருக்கும் எம்பெருமான்கள் யாவர்? என்று எண்ணினர். அடுத்த கணமே ஸ்ரீபார்த்தஸாரதியும், திருவிடந்தை எம்பெருமானும் ஆழ்வாரின் திருவுள்ளத்திற்கு வந்து விட்டார்கள். ஸ்ரீபார்த்தஸாரதி ருக்மிணிப் பிராட்டியோடு எழுந்தருளி இருக்கிறர். இடவெந்தை எம்பெருமானும் பிராட்டியை விட்டுப் பிரியாமல் இருக்கிறர்! இவ்விரண்டு பெருமான்களும் நினைத்த நேரத்திலேயே தம் மனத்தில் வந்து தங்கியதை நினைத்து ஆழ்வார் மகிழ்ந்தார். 'திருவல்லிக்கேணி எம்பெருமான் அருகில் இருக்கிறர். உடனே இங்குவந்து என் மனத்தில் குடிகொண்டார்; அழைத்தவுடன் வந்து உதவுகிறவன் இவன்! திருவல்லிக்கேணிக்கும் தொலைவில் திருவிடந்தை இருக்கிறது அந்த எம்பெருமானும் வந்துவிட்டாரே! என்ன கருணை!' என்று நினைத்தார். ஆழ்வாரின் எண்ணத்தை அறிந்து இடவெந்தை எம்பெருமான் முறுவல் கொண்டு (புன்னகையுடன்) மொழிந்தான் 'ஆழ்வீர்! நீர் இவ்வாறு நினைக்கலாமா? என்னை நினையாதவர்களுக்கு நான் அரியன். நீர் 'பற்றுடை அடியவர்! உமக்கு மிகவும் எளியன் நான் எங்கிருந்து வர வேண்டும்? நான்தான் உம் மனத்திலேயே இருக்கிறேனே! எவர்கள் என்னை அன்போடு ஏத்திப்போற்றுகிறர்களோ; அவர்களின் மனத்தில் மகிழ்ந்து வாழ்பவன் நான்' என்றுர். ஆழ்வாரின் மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடியது! 'இடவெந்தை மேவிய பெருமானே! இனி உம்மை எல்லோரும் 'ஏத்துவார் தம் மனத்துள்ளான் என்று அறிந்து கொள்ளட்டும் என்று மங்களாசாஸனம் செய்தார்

பார்த்தற் காயன்று பாரதம் கைசெய்திட்டு வென்ற பரஞ்சுடர்
கோர்த்தங்காயர்தம் பாடியில் குரவை பிணைந்தவெங் கோவலன்
ஏத்துவார் தம் மனத்துள்ளானிட வெந்தை மேவிய வெம்பிரான்
தீர்த்த நீர்த்தடஞ் சோலைசூழ் திருவேங்கடமடை நெஞ்சமே!

(பெரிய திருமொழி 1—8—4)

வழுவிலா அடிமை : வயிறு வளர்க்க அடிமை செய்வதும் தொண்டுதான். பகவானுக்கு அடிமை செய்வதும் தொண்டுதான் ! மனிதனுக்குச் செய்யும் அடிமை வழு அடிமை (குற்றமுள்ள அடிமை). பகவானுக்குச் செய்யும் அடிமை வழுவிலா அடிமை பகவானுக்கு அடிமை செய்வது நம் கடமை இதனுல் நன்மை பெறமுடியும். நாம் பல தீவினை களைச் செய்கிறோம். தெரிந்தும் செய்கிறோம். தெரியாமலும் செய்கிறோம். பிறருக்குத் தெரியாமல் தீய செயலைச் செய்து விட்டதாகப் பெருமை கொள்கிறோம். செய்யும் போது சுதந்திர உணர்வுடன் செய்து விடுகிறோம். எல்லாம் சேர்ந்து நம் மீதே படையெடுத்து வருகின்றன. நாற்புறமும் சூழ்ந்து கொள்கின்றன. எங்கு சென்றுலும் விடுவதில்லை. பின் தொடர்ந்து பயமுறுத்துகின்றன.

'உலகத்தீர் ! நான் மிகக் கொடியவன் ! கொடிய தீவினை களைச் செய்தேன். என்னைக காப்பாற்ற அனைவரும் மறந்து விட்டார்கள். என் தந்தை (எந்தை)யிடம் ஓடினேன் ! உனக்கே நாம் ஆட் செய்வோம்' என்றேன். அச்சத்தோடு பின்னுல் திரும்பிப் பார்த்தேன் கொடுவினைகள் எங்கே ? ஒரே ஓட்டம் ! என்னைத் துரத்தி வந்த தீவினைகள் என்னைப் பார்த்தே பயந்தன ! ஏன் தெரியுமா ? இடவெந்தை எம்பெரு மானுக்குத் கதாண்டனுய்விட்டேன்! அதனுல்தான்! அவன் எல்லாப் பயன்களையும் கொடுப்பவன். அசையும் பொருள் அசையாப் பொருள்களையும் படைத்தவன். அவற்றைக் காப்பவன். என்னைக் காக்க அவனுலன்றி யாரால் முடியும் ?

நின்று திரியும் பிறவியெல்லா நேர்வித்துக்
கொன்று திரியுங் கொடுவினையா — நின்று
வெருவிட வெந்தைக்கே விழுமிய தொண்டனுனேன்
திருவிட வெந்தைக்கே செறிந்து.

(நூற்றெட்டு திருப்பதிஅந்தாதி—92)

# தேவு மற்றறியேன்—11

"பொத்தவுரலைக் கவிழ்த்து அதன்மேலேறி" உறியமர் வெண்ணெயைத் திருடி உண்டு, களவுக்கு ஸாக்ஷியான அந்த உரலோடே சிறுகண்ணிகளால் முடிந்த தாம்பினால் தாய் கட்டக் கட்டுண்டிருந்தான் ஸர்வஸ்மாத்பரனான கண்ணனெம் பெருமான்—என்று எல்லா ஆழ்வார்களும் ஆழங்கால் படும்

**Dr. V.V. ராமானுஜம்**

படியான திவ்ய சரித்திரத்தைக் காற்கடைக் கொண்டு, நம்மாழ்வாரே ஆராவமுதமாக தமது நாவுக்குத் தித்திப்பதாக மதுரகவிகளின் அநுபவத்தைப் முதல் பாசுரத்தில் பார்த்தோம். மேலே அவரநுபவமாவது:

**நாவினால் நவிற்றின்ப மெய்தினேன்**
**மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே**
**தேவுமற்றறியேன் குருகூர் நம்பி**
**பாவின் இன்னிசை பாடித்திரிபவனே.**

**—என்பதாம்.**

நான் நாபடைத்தது பயனுறுமாறு என் ஸ்வாமியான ஆழ்வாரின் புகழைப்பாடி பட்டற்ற இன்பம் பெற்றேன்; மிகவும் விரும்பத்தக்க அவரின் திருவடிகளோடு மெய்யே பொருந்தினேன். ஆழ்வாரையொழிய வேறு தெய்வமேதும் அறியமாட்டேன். திருக்குருகூர் நம்பியான அவர் அருளிச் செய்த இன்பமிகு தமிழ்ப்பாக்களைப் பாடிக் கொண்டு இனிதே போது போக்குகிறேன்.

இப் பாசுரத்தின் நடு இரண்டடிகளும் பொன்னே போல் போற்றத்தக்கவை. அவன் பொன்னடி மெய்ம்மையே மேவினேன் என்று தன் ஸ்வாமியான குருகூர்ச் சடகோபனின் திருவடிகளையே ப்ராப்யமும் ப்ராபகமுமாக (அடைய வேண்டிய பேரும் பேறுகவும் அப்பயன் பெறுவதற்கு மார்க்க மாகவும்) பற்றி விட்டதைச் சொல்லி, இது ஸத்யம்; ஆழ்வாரைத் தவிர வேறு தெய்வமேதும் அறிகிலேன்'' என்று தம் அத்யவஸாயத்தை அறுதியிட்டு நமக்குக் கூறுகிறார்.

தேவுமற்றறியேன் என்பது, இராமபிரான், தமது அவதார கார்யம் முடிந்து தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளும் போது திருவடியான அநுமானை அழைக்க, அவர் விண்ணப்பித்த **பாவோ நான்யத்ர கச்சதி** என்ற பதிலை நினைவுறுத்துகிறது. ''ஹே ரகுவீர! அடியேனுக்கு ராம பக்தி நிலைத்துள்ளது. நீ உகந்து ஆலிங்கனம் பண்ணிய இவ்வுடலை யும், உன் திருவடி பொருந்தின இம்மண்ணையும், உன்கதை நடையாடும் இந்த தேசத்தையும் விட்டு வேறெதையும் என் மனம் நாடுகிறதில்லை''. என்று அழுத்தமாக உரைத்தார் திருவடி. நீ தருவதாக அழைக்கும் வைகுந்தமென்னும் வான் எனக்கு வேண்டாம் என்னுமல் **நான்யத்ர** (மற்றெங்கும்) என்றார் திருவடி. *ஆயர் தம் கொழுந்தே என்னும் இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன் என்றார் தொண்டரடிப்பொடிகள். பெரிய பெருமானை அநுபவிக்கும் இச்சுவையே சுவை. பரமபதமாளும் அச்சுவையும் வேண்டேன் என்றார். திருவடியோ, அப்பெயரும் சொல்லாமல், மற்றெதுவும் வேண்டேன் என்றார். மதுரகவி களும் 'பரமபதநாதனும் எனக்குத் தெய்வமன்று'' என்பதையே மனதில் கொண்டு பேசுகிறார். (மேல் பாசுரம் காண்க) ஆழ்வாரையே பரம உத்தேச்யமான வஸ்துவாகக் கொண்டேன் என்று சாஸ்தரவாஸனையால் சொல்லுவதன்று. ஆசார்யனான அவரது திருவடிகளின் போக்யதையாலும் அவற்றின்கண் ப்ரீதயதிசயத்தாலும் சொல்லுகிறார். குருகூர்

நம்பிபா என்பதை நம்பி பாடிய பா என்றும், நம்பி விஷயமான பா என்றும் பொருள் கொள்ளலாம். பாடித் திரிவனே என்பதில் இவர் ஸதா திரிந்து கொண்டுள்ளதால் நல்ல உடல் நிலையிலுள்ளமை காட்டப்படுகிறது. இதற்கடி, இவர் பாடும் பாவின் இன்னிசை இவருக்கு உண்ணும் சோறாகவும் பருகு நீராகவும் தின்னும் வெற்றிலையாகவும், பிணிக்கு மருந்தாகவும் அமைந்துள்ளமையே. ஆழ்வார் பாடிய திருவாய்மொழி ஆயிரத்தையும் இசையில் பாடுவார். அதிலும் அவ்வப்பதிகங்களில் பலன் சொல்லித் தலைக்கட்டும் திருநாமப் பாட்டில் ஆழ்வார் திருநாமம் வருவதால் அதை இன்னும் ரஸித்துப் பாடுவார். ஆழ்வார் விஷயமான ஸ்வப்ரபந்தத்தை அதற்கும் மேலாக மகிழ்ந்து பாடுவார். இதுவே இவருக்கு நித்யயாத்ரையாக அமைந்தது என்று அறிக.

இதற்கடுத்த மூன்றும் பாசுரம் :

**திரிதந்தாகிலும் தேவபிரானுடைக்**
**கரிய கோலத் திருவுருக் காண்பன் நான்**
**பெரிய வண்குருகூர் நகர் நம்பிக்கா**
**ளுரியனாய் அடியேன் பெற்ற நன்மையே.** — என்பதாம்,

இப்படி பகவத் விஷயத்தோடு ஒட்டில்லாமல் திரிந்தேனாகிலும், நித்யஸூரிகளுக்குத் தலைவனான பரமபதநிலயனான ஸர்வேச்வரனுடைய அழகிய நீலமான (பிராட்டியுடன் கூடிய) திருமேனியை (அவன் காட்ட) நான் காண்கிறேன். குருகூர் நம்பியான நம்மாழ்வாருக்கு ஆட்பட்டமையால் நான் பெற்ற பெரும் பேறு இது என்று மகிழ்கிறார்.

தேவுமற்றறியேன் என்று பகவானிடமிருந்து விலகித் திரிந்த தம்மை அவன் பஹுமானித்ததை இங்கு சொல்லுகிறார். ஆழ்வார் பக்கல் பக்தி நிறைந்த இவர் திருவுள்ளத்தில் புகுந்து நிற்பது அவனுக்கு மிக விருப்பமானது. அத்திரு

வுள்ளத்தில் தன் *கரியகோலத் திருவுருவைக் கொண்டு வந்து காட்ட, அதிப்ரீதராகி, "ஆழ்வாருக்கு அநந்யார்ஹசேஷமாய் (மற்றவர் யாருக்கும் உரித்தாகாமல் ஆழ்வாரொருவருக்கே அடியனாய்) ஆனமையே, இப்பேற்றுக்குக் காரணம் என்று அறுதியிடுகிறார்.

பகவானுடைய உகப்புக்காக நாம் ஆசார்யனிடம் அன்பு மிக்கு இருக்க வேண்டும்; ஆசார்யனுடைய உகப்புக்காக பகவத் விஷயத்திலும் அன்புகாட்ட வேண்டும். ஆசார் யனையே தெய்வமாகப் பற்றியிருப்பான் ஒருவனுக்கு எம்பெரு மான் தானே மேல் விழுந்து தன்னைக் கொடுக்கும். "திருமா மகள் கொழுநன் தானே வைகுந்தம் தரும்"

"தேவுமற்றறியேன்" என்று நிலைத்திருக்குமிவர், இவன் தன்னைக் காட்டினாலும் காண்பரோ? என்னில்; ஆழ்வார் காட்டித் தந்த தெய்வம் என்கையாலும், அவர் உகந்த வஸ்து என்றும், ஆழ்வார் ஸம்பந்தமுள்ளவன் என்று கொண்டு அவன் காட்டினமையாலும் இவர் காண்பர். ஆசார்ய ருசி பரிக்ருஹீதமான விஷயம் என்று பகவத் விஷயத்தை உத்தேச யமாகக் கொள்ளவேணும் என்பது முன்னமேயே வலியுறுத்தப் பட்டுள்ளது. ஆசார்ய ஸம்பந்தத்தை யறுத்துக் கொண்டு பெறுவதானால் பகவத் விஷயமும் விலக்கப்பட வேண்டியதே.

சோழனுடைய உபத்ரவத்தாலே எம்பெருமானார் வெள்ளை சாத்தி மேற்கே எழுந்தருளி இருந்தபோது தர்சனத் துக்காகத் தம் கண்களைத் தந்த நம்]கூரத்தாழ்வான் ஒருசமயம் நம் பெருமாளைத் திருவடி தொழ கோயிலுக்குள் சென்றார். 'உடையவர் திருவடி ஸம்பந்தமுடையாரை உள்ளே புகவிட வேண்டாம்" என்று அரசன் கட்டளை இருந்ததை இவரறி யார். கோயில் வாசலில் அப்படியுள்ளமை கேட்டு இவர் திரும்ப ஒருப்பட, வாசல் காப்போன், "ஸ்வாமி! நீர் ஒரு வருக்கும் விரோதி அல்லாத ஸாது. உள்ளே புக்கு திருவடி

தொழும்'' என்றான். இதுகேட்ட ஆழ்வான் காதைப் பொத்தி, ''எம்பெருமானுருநவையறுத்துக் கொண்டு பெருமாளைத் தொழுது ஆக வேண்டியது ஒன்றுமில்லை'' என்று ஸ்ரீரங்கத்தை விட்டு திருமாலிருஞ் சோலைக்கு எழுந்தருளினார் என்று ஐதிஹ்யம் இங்கு காட்டப்பட்டுள்ளது. இந்த சரித்திரம் திருப்பாவையில் ''எல்லே இளங்கிளியே'' பாசுர விளக்கத்தில் ''உனக்கென்ன வேறுடையை'' என்ற இடத்திலும் காண்கிறது.

இன்னொரு ஐதிஹ்யமும் இப்பாசுர வ்யாக்யானத்தில் காட்டப்படுகிறது. குணமலைப்பாடி என்ற ஊரின் தலைவனான காங்கேயன் என்னும் வேளாளன் தன் சேனையுடன் சென்றபோது கோயிலாத்தான் என்ற ஸ்ரீவைஷ்ணவர் மார்க்கத்தில் அவனையும் அவன் சேனையையும் விருந்திட்டு நன்றாய் உபசரித்தார். இதனால் மகிழ்ந்த காங்கேயன், ''உமக்கு எது வேணுமானாலும் தருகிறோம்; கேளும்'' என்று ஆத்தானைக் கேட்க, அவரும், ''உம்மிடம் முன்னமே பெரியதொரு உபகாரம் கொண்டோமே!'' என்ன, அவனும் ''அப்படியொன்றும் நினைவில்லையே!'' என்ன, ''எங்களாசார்யர், 'நான் கோயிலிலே மண் பெற்றது அவ்வேளாளனாலே' என்று உகந்து கூற நான் கேட்டதுண்டு. இதற்கு மேற்பட உபகாரம் எனக்கு வேறொன்றுமில்லை'' என்று ஆத்தான் பதிலிறுத்தாராம். நமதாசார்யனின் மதிப்பைப் பெற்றவரை நாம் உகந்து பூஜிக்க வேணும் என்பது நாமறியக் காட்டப்படும் பொருள் இங்கு.

(தொடரும்)

# வைணவர் வாழ்க்கையில் வழங்கும் தமிழ் நயம்

தமிழ் நாட்டு வைணவர்கள் குறிப்பாகத் தென்னாசாரிய சம்பிரதாயப்படி வாழ்ந்து வருகிறவர்களுடைய அன்றாட வாழ்வில் வழங்கும் சீரிய தமிழ் வழக்குகள், பிரயோகங்கள், குறியீடுகள், எல்லாம் அவர்கள் தமிழ்ப் பற்றில் யாருக்கும் இளைத்தவர்கள் இல்லை என்பதைக் காட்டுவன.

தங்கள் நெற்றியில் அணியும் நாமத்தைத் '**திருமண்காப்பு**' என்னும் அழகிய தொடரால் குறிப்பிடுகிறார்கள். '**துளசி**' என்று மற்றவர்களெல்லாம் பரவலாகக் கூறுவதை வைணவர்களும், வைணவ ஆலயங்களில் கைங்கரியம் செய்பவர்களும் '**திருத்துழாய்**' என்று நயமாக வழங்கும் அழகையும் காணலாம். இவ்வழக்கு வைணவ ஆலயங்களிலும் உண்டு.

**தீபம் நா. பார்த்தசாரதி**

'வாருங்கள்' என்னாமல் **எழுந்தருள வேண்டும்** என்றும் பெரியவர்களை மரியாதையாகச் சொல்லி வரவேற்பது '**சேவிப்பது**' என்று விநயமாகக் குறிப்பிடுவதும் **சேவை சாதிக்க வேண்டும்**' என்பதும் வைணவ பரிபாஷை அளித்த அருமையான தமிழ்த் தொடர்கள் ஆகும். இவை அன்றாட வாழ்விலேயே வைணவக் குடும்பங்களில் வழங்கக் காணக் கூடியவை. ஸ்ரீ வைஷ்ணவர்களுடை இல்லங்களில் உணவுப் பண்டங்களை ஆக்கும் இடத்தைச் சாதாரணமாக மற்றவர்கள் கூறுவதைப்போல் 'அடுக்களை' என்றோ 'சமையலறை' என்றோ

அல்லது ரொம்பவும் மாடர்னாக 'கிச்சன்' என்றோ கூறுவது கிடையாது. **திருமடைப்பள்ளி** (இது பேச்சு வழக்கில் திருமாப் பளி என வழங்கும்) 'திரு' என்னும் தமிழ்ச் சொல்லுக்குக் 'கண்டாரால் நயந்து விரும்பப்படும் தன்மை' என்பது பத சாரம். இந்தத் 'திரு' என்னும் அழகிய தமிழ்ச் சொல்லை எல்லா நல்ல இடங்களிலும் இணைத்து அழகுறப் பயன்படுத் தும் வழக்கம் தமிழ்நாட்டு வைணவர்களிடம் மட்டுமே அமைந்துள்ளது. வைணவத்தின் தனிச்சிறப்பு ஆகும் இது. உண்பது, சாப்பிடுவது, ஆகாரம் செய்வது என்றெல்லாம் பலர் பல வேறுவிதமாகக் குறிப்பிடுவதைத் **திருவமுது செய்வது**, திருவமுது செய்தருளுவது எனப்பக்குவமாகக் குறிப் பிடும் பண்பாடு தமிழ் நாட்டு வைணவர்களுக்கு உரியது. இறைவி, இறைவனைத் தாயார், பெருமாள் என்னும் வழக்கும் வைணவர்களுக்கு உரிய சிறப்பு. **திருப்பள்ளி எழுச்சி, உச்சிக் காலம், பள்ளியறை, திருக்கண்ணமுது, மண்டகப்படி, அக்காரவடிசல், தேன்குழல், சாத்துமுறை, சேவை சாதிப்பது**, போன்ற பதங்களும், தொடர்களும் வைணவக் கோவில்களில் வழங்குபவை. **தளிகை, சாற்றமுது** (ரசம்) **கறியமுது** (கறி) **கூட்டமுது, இலையமுது** (கீரை) என்றும் குழம்பு (சாம்பார்) **திருக்கண்ணமுது** (பாயாசம்) என்றும் உணவுப் பண்டங்களை எல்லாம் நல்ல தமிழில் அழைத்துப் பழகியிருக்கிறார்கள் ஸ்ரீ வைஷ்ணவர்கள். 'சுவாமி **திருமாளிகை** (வீடு) எவ்விடம்?' என்றும் 'சுவாமி **திருமேனி** (உடம்பு) பாங்கா? என்றும் பவ்ய மாக விசாரிக்கும் நாகரிகப் பண்பு வைணவ பரிபாஷைத் தமிழில்தான் உண்டு. நாகரிகமும், நகர வாழ்வும் இந்த வழக்குகளை இன்று அழித்து வருகின்றன. நம் தமிழ் மொழி யின் மிகச் சிறப்பான அடைமொழிப்பதமான 'திரு' என்பதை முதன்முதலில் இடமறிந்து தரமறிந்து பயன்படுத்திய பெருமை வைஷ்ணவ சம்பிரதாயத்தைப் பின்பற்றுவார் களுக்கே உரியதாகிறது. **திருப்பள்ளி எழுச்சி, திருமங்கை யாழ்வார், சிறிய திருமடல், பெரிய திருமடல், திருப்பாணாழ்**

வார், திருத்தொண்டு, திருக்கை வழக்கம், திருப்பாற்கடல் என்று வைணவம் முழுதும திருச் செல்வம் கொழிக்கிறது.

திருமாலிருஞ்சோலைமலை, திருக்கண்ணமங்கை, திருக் கண்ணமங்கை, திருக்கோட்டியூர், திருநீர்மலை, திருத்தண்கால் என்பன போல வைணவத் தலங்கள் பலவற்றின் பெயர்களி லும் திருவிளங்கிநிற்கிறது. திருவாராதனம், திருவாசி, திரு நாள், திருநட்சத்திரம் போன்ற வழக்குகளையும கூர்ந்து கவனிக்க வேண்டும். தேகவியோகம் அடைவதைக்கூடத் திருநாடு அலங்கரிப்பது என்று கூறும் நயமான வைணவ பரிபாஷையை நபமால் வியவாமல் இருக்க முடியவில்லை.

இவை தவிரவும் வைணவர் இல்லங்களில் பல நயமான தமிழ்ச் சொற்கள் சொற்றொடர்கள், இன்னும் பெருவழக் காக உள்ளன. ஆராய்ச்சிக்குரிய பல ஆழமான அருந் தொடர்களை வைணவர்கள் தமக்குள் வழங்கிக் கொள்ளும் பாங்கு கூர்ந்து கவனித்து விளக்குதற்கு ஏற்றது. ஆராய்வதற் கும் உரியது.

வைணவக் கோயில்கள், கோயிற்பணிகள், பிரபந்தங்கள் எல்லாவற்றிலும்கூட அரையர், முன்னடி பின்னடி (பிரபந்த சேவையில் ஓர் உத்தி) நந்தவனம், சூடிக்களைதல், கண்ணி நுண் சிறுத்தாம்பு, செங்கல் பொடிக்கூறை வெண்பல்தவத் வர், தொண்டரடிப்பொடியாழ்வார், என்று பல அருந்தமிழ்த் தொடர்கள் பயின்றுள்ளன. வழங்கியுள்ளன.

தமிழ்நாட்டு வைணவர் வாழ்க்கையில் வழங்கும் இத் தமிழ் நயங்களைத் தனியே ஆராயவும், அறுகவும், சிறப்பறிய வும் இன்னும் விரிவாகவும் அதிகமாகவும் முயல வேண்டும் என்பது என் கருத்து ஆகும்.

—o—

# ஆசிரியர் பக்கம்

**ஆலவாயன் :** என்ன ஆசிரியரே! இது புரட்டாசி மாத மாயிற்றே. இது வேதாந்த தேசிகர் அவதரித்த மாதமல்லவா. எனவே அவரைப்பற்றி ஏதாவது பேசிக் களிப்போமே!

**ஆசிரியர் :** தடையென்ன ஆலவாயா! ஸ்ரீவைஷ்ணவ ஆசாரியர்களிலேயே மிக அதிகமாக நூல்கள் அருளிச் செய்தவர் வேதாந்த தேசிகர். இவர் 108 நூல்களை அருளிச் செய்திருக்கிறார்.

**ஆலவாயன் :** அப்பப்பா! அவற்றைப் படிப்பதற்கே ஒரு மனித ஆயுள் வேண்டும் போல் இருக்கிறதே! அவருடைய ஸ்ரீ ஸூக்திகளில் சுவையான ஒன்றைக் கூறுமே, கேட்கிறேன்.

**ஆசிரியர் :** அவர் அருளிய நூல்கள் வடமொழியில் அல்லவோ இருக்கின்றன. உமக்கு வடமொழியும் தெரியுமல்லவா?

**ஆலவாயன் :** வடமொழியில் நான் புலமை பெற்றவன் அல்ல என்றாலும் ஏதோ ஓரளவுக்குத் தெரியும். ஒரு கல்லூரியில் வடமொழி ஆசிரியராக இருக்கும் நீர் எப்படி வடமொழி நூல்களைப் பயிற்றுவீரோ அப்படியே எனக்கும் எளிய முறையில் கூறினால் புரியுமல்லவா ?

**ஆசிரியர் :** வேதாந்த தேசிகர் காஞ்சி வரதராஜனைக் குறித்து 50 சுலோகங்கள் கொண்ட 'வரதராஜ பஞ்சாசத்'

என்ருெரு தோத்திரத்தை அருளியிருக்கிருர். அதில் ஒரு சுலோகம் "த்வத் தேஜஸி த்விரத சைலபதே! விம்ருஷ்டே ச்லாக்யேத ஸந்தம ஸபர்வ ஸஹஸ்ரபாநோ:" என்பது. இதன் பொருள்...

**ஆலவாயன் :** எனக்குப் புரிகிறது ஆசிரியரே! "தேவாதி ராஜனே, உம்முடைய பிரகாசத்தை ஆராய்ந்து பார்த்தால் சூரியனைவிட அமாவாசையே புகழப்படும்" என்பதுதானே பொருள்? ஆனல் இது விளங்கவில்லையே! சூரியனுக்கு வந்த தாழ்வு என்ன? அமாவாசைக்கு வந்த ஏற்றம் என்ன? சூரியனைவிட அமாவாசை எப்படி உயர்ந்ததாகும்?

**ஆசிரியர் :** அங்குதான் வேதாந்தாசாரியரின் சாமர்த்யம் இருக்கிறது. இதை ஸ்ரீ. உ. வே. மஹாவித்வான் P.B. அண்ணங்கராசாரியர் ஸ்வாமி மிக அழகாக விளக்கியுள்ளார். வரதராஜன் ஆயிரம் சூரியர்களுடைய பிரகாசத்தை உடையவன். அவனோடு சூரியனுடைய பிரகாசத்தை ஒப்பிட்டால் நிச்சயம் சூரியனுடைய ஒளி குறைவாகவே இருக்குமாதலால், தோல்வியுற்றுவிடுவான். ஆனல் பிரகாசமே இல்லாத அமாவாசையை யாரும் வரதராஜனின் பிரகாசத்தோடு ஒப்பிடப் போவதேயில்லை எனவே அவனுக்கு தோல்வி என்ற அவமானமும் இல்லை ஆகவே சூரியனைக் காட்டிலும் அமாவாசையே அவமானப்படாமல் புகழப்படும்.

**ஆலவாயன் :** ஆகா! என்ன அற்புதமான கற்பனை. இத்தகைய சுலோகங்களை எழுதுவதற்கு வேதாந்தாசாரியர் ஒருவரே சாமர்த்யமுடையவர் என்று நீர் சொன்னது முற்றிலும் சரி.

---

# V. N. வெங்கடவரதாசாரியர்

## (வக்கீலுடன் ஒரு பேட்டி)

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் எப்படியோ தென்கலே வடகலே என்ற இரு வகுப்பினர் ஏற்பட்டு விட்டனர். இவர்களிடையே விரும்பத்தகாத வகையில் விரோதங்களும் வழக்குகளும் ஏற்பட்டு விட்டன. ஆனால் இவற்றிற்குப் பரிகாரம் தேடும் நோக்கத்துடன் பலர் ஸ்ரீ வைஷ்ணவ சமுதாயத்தில் இத்தகைய இரு பிரிவுகள் ஏற்பட்டதற்கான பின்னணி என்ன? எப்போது இப்படிப் பிரிவுகள் ஏற்பட்டன என்றவற்றை அறிவதில் ஆவலாயிருப்பதோடல்லாமல் நமக்கும் இதுபற்றி பல கேள்விகளே எழுதிய வண்ணம் இருக்கின்றனர். (சென்ற இதழில் 'தொசார்யன் பதில்கள்'' பகுதியில் ஒரு கேள்வி வெளியிடப் பட்டிருந்தது) எனவே இதுபற்றிய சரியான விவரங்களைத் தெரிந்து கொள்ள பிரபல வக்கீல் V N. வெங்கடவரதாசாரியரை அணுகினேம். அவருக்கு இந்தப் புரட்டாசி விசாகத்தோடு 91 வயது பூர்த்தியாகிறது இத்தகைய வழக்குகள் பல வெற்றிகரமாக நடத்தி அதில் 65 வருட அனுபவமுள்ளவர் (சமீபத்தில் ஒய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் அவரிடம் ஒருமுறை "தாங்கள் முதன்முதலில் வக்கீலாக கோர்ட்டில் காலடி வைத்த அன்று நான் பிறந்திருக்கவே மாட்டேன்'' என்று வேடிக்கையாகக் கூறினர்) அந்த அளவுக்கு அனுபவம் வாய்ந்த அவரை, விருப்பு வெறுப்பில்லாமல் வடகலே தென்கலே வித்யாசங்களே கோர்ட்டு ரெகார்டுகளின் அடிப்படையில் விளக்குமாறு வேண்டினேம். அவரும் மகிழ்ச்சியுடன் ஒரு பேட்டியளித்தார். தமது 91 வயதிலும் துளிகூட சோர்வடையாமலும், வழக்குகளே நம்பர்களுடனும் வருடங்களுடனும் துளிகூட ஞாபகமறதியில்லாமலும் கூறியது எங்களே திகைக்க வைத்தது. நீங்களே பாருங்களேன்......

கே: தங்கள் இளமைக் காலத்தைப்பற்றி சற்று விளைவு கூற முடியுமா?

ப: நான் பிறந்த வருடம் 1888, சேலம் ஜில்லாவில் வெங்கரை என்ற ஊரில் பிறந்தேன். திருச்சியில் Inter வரை வாசித்தேன். பிறகு சென்னையில் கிறித்துவக் கல்லூரியிலும் சட்டக் கல்லூரியிலும் வாசித்தேன். பிறகு 1907ல் சென்னையில் பிரபல வக்கீலாக இருந்த T. ரங்காசாரியாரின் குமாரத்தியை மணந்தேன். சட்டப்படிப்பை முடித்ததும் அவரிடமே அபரெண்டிசாக பயிற்சி பெற்றேன். அப்போதே தனியாகவும் வழக்குகள் நடத்தியிருக்கிறேன்.

கே: தாங்கள் அதிகமாக நடத்திய வழக்குகள் எத்தகையவை?

ப: முக்யமாக கோவில் வழக்குகளையே நான் அதிகம் நடத்தியிருக்கிறேன்.

கே: அதற்கு குறிப்பாக ஏதாவது காரணமுண்டா?

ப: எனது மாமனார் டிரஸ்டு கேஸ்களுக்கு மிகவும் புகழ் பெற்றவர். அவரிடம் நான் ஜூனியராக இருந்த காரணத்தால் அத்தகைய வழக்குகளில் எனக்கு அதிகம் பழக்கம் ஏற்பட்டது. மேலும் அக்காலத்தில் இத்தகைய வழக்குகளை நடத்துவதற்கு அதிகமாக வேறு பலர் இருக்கவில்லை. எனவே எனக்கு கோவில் வழக்குகள் அதிகம் கிடைத்தன. 1914 முதல் நான் வழக்குகள் நடத்திவருகிறேன்.

கே: தாங்கள் நடத்திய முக்கியமான வழக்குகள் பற்றி ஏதாவது கூறமுடியுமா?

ப: முதன் முதலில் மன்னார்குடி கோவில் வழக்கு. பிறகு திருச்சேறை வழக்கு. திருப்பதி வழக்கு, ஸ்ரீரங்கம் வழக்கு

ஸ்ரீ பெரும்பூதூர் வழக்குபோன்ற பல ஊர் வழக்குகளில் நான் ஆஜராகியிருக்கிறேன். காஞ்சீபுரம் கேஸ்களும் நான் நடத்தியவையே. தற்போது மிகவும் பிரபலமாக நடந்த யானைக் கேஸ் நான் நடத்தியதுதான்.

**கே: இவை அத்தனையும் தென்கலை-வடகலை சம்பந்தப் பட்ட கேஸ்கள்தானு?**

ப: முக்கால் பாகம் அப்படித்தான் இருக்கும். 1935க் குப் பிறகு நடந்த தென்கலை வடகலை கேஸ்கள் அனைத்தும் நான் நடத்தியவைதான்.

**கே: இது தவிர வேறு பொதுவான (தென்கலை-வடகலை சர்சை அல்லாத) வழக்குகளும் நடத்தியிருக்கிறீர்களா?**

ப: திருவாடுதுறை வழக்கு அக்காலத்தில் நடந்த பிரபலமான வழக்குகளில் ஒன்ருகும். அதை நடத்தியதும் நானே. சைவசித்தாந்தம் என்பது என்ன என்பதை தீர்மானித்த வழக்கு அது. இது போன்ற பல வழக்குகளையும் நடத்தியிருக்கிறேன்.

**கே: எல்லா வழக்குகளிலும் வென்றிருக்கிறீர்களா?**

ப: தென்கலை-வடகலை வழக்குகளில் நான் தென்கலையாருக்காக ஆஜராகியிருக்கிறேன். இவற்றில் ஒன்றில் கூட நான் இதுவரை தோற்றது கிடையாது தற்போது திருப்பதி அர்ச்சகர்களுக்கும் பெரிய ஜீயர் ஸ்வாமிக்கும் இடையே நடக்கும் வழக்கு ஒன்று மட்டும் சுப்ரீம் கோர்ட்டில் இன்னும் தீர்ப்பாகாமல் இருக்கிறது.

**கே: இவ்வளவு வழக்குகள் நடத்தியிருக்கிறீர்களே! தென்கலை வடகலை என்ற சொற்கள் வழக்குகளில் வந்தது எப்போது என்று கூற முடியுமா?**

ப: முதன் முதலில் திருமங்கை ஆழ்வார் செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர்'' என்று, (திருமொழி 7-8.7) திருவழுந்தூர் அந்தணர்கள் தமிழ் வேதமும் ஸம்ஸ்க்ருத வேதமும் கரை கண்டவர்கள் என்று பாடுகிறார். சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன் வாழ்ந்த கம்பரும் "வடகலை தென்கலை வடுகு கனடம் இடமுள பாடை யாதொன்றி னுயினும் திடமுளரகு குலத்திராமன் தன் கதை அடைவுடன் கேட்பவர் அமரராவரே...... என்று பாடுகிறார். ஆக அவர்கள் காலத்தில் தென்கலை என்பது தமிழ் மொழியையும் வடகலை என்பது ஸம்ஸ்க்ருத மொழியையும் குறிப்பதாக இருந்தது.

**கே: சரி ஸ்ரீ வைஷ்ணவர்களிடையே இரு பிரிவுகள் இவ்வாறு தோன்றியது எப்போது? அதற்குக் காரணம் என்ன?**

வைதிகர்களுக்கு மிகவும் முக்யமானவை வேதங்களின் சிகரங்களான உபநிஷத்துக்கள், ப்ரஹ்மஸூத்ரங்கள், பகவத் கீதை ஆகிய மூன்றும் ஆகும். இவை ப்ரஸ்தானத்ரயம் எனப் படுகின்றன. இவை வடமொழியில் உள்ளன. தமிழ் மொழி யில் உள்ள நாலாயிர திவ்யப் பிரபந்தமும் ஸ்ரீவைஷ்ணவர் களுக்கு உயிரானவை. ஆக இவ்விரு மொழிகளிலும் வல்ல வர்களான ஸ்ரீ வைஷ்ணவர்கள் உபயவேதாந்த ப்ரவர்த்தகர் கள் எனப்பட்டார்கள்.

ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தில் ஆழ்வார்கள் திவ்ய ஸூரிகள் என்றும், அவர்கள் அருளிச்செய்த தமிழ்ப் பாசுரங்கள் திவ்ய பிரபந்தங்கள் என்றும், அவர்களால் பாடல்பெற்ற கோயில்கள் திவ்ய தேசங்கள் என்றும் சிரேஷ்டமாக குலாவப் படுகின்றன. ஸ்ரீமந் நாதமுனிகள் காலத்தில் முக்கியமான திவ்யதேசங்களில் திவ்ய பிரபந்த அநுஸந்தானம் முதலில் ஏற்படுத்தப்பட்டது ஸ்ரீராமாநுஜர் காலத்தில் இவற்றின் நிலை உச்சத்தை அடைந்தது என்று கூறலாம். வடமொழி

ப்ரஸ்தானத்ரயத்திற்குப் தாமே விரிவுரைகள் அருளிச் செய்தார். தமிழ் மறைகளான திவ்யபிரபந்தங்களை திவ்ய தேசங்களனைத்திலும் ஸேவிக்கும் ஏற்பாட்டை விரிவாக்கினர். தம்முடைய சீடர்களைக் கொண்டு திவ்யபிரபந்தங்களுக்கு வியாக்கியானங்கள் இயற்றச் செய்தார். ஆனால் ஸ்ரீராமாநுஜர் காலத்திற்கு வெகு பின்னர் ஸ்ரீவைஷ்ணவ சமுதாயம் இரண்டு பாகமாகி விட்டது. வடமொழி கிரந்தங்களுக்கு முக்யத்வம் கொடுப்பவர், தென்மொழி கிரந்தங்களுக்கு முக்யத்வம் கொடுப்பவர் என்ற இருபிரிவினராயினர் ஆனாலும் இவர் களுக்குள் சண்டை சச்சரவுகள் இருந்ததாகத் தெரியவில்லை. எனினும் பின்னர் சச்சரவுகள் ஏற்பட்டு, வளர்ந்து வெகு காலத்திற்குப் பின் வழக்குகளில் கொண்டு விட்டன.

**கே: வடகலையாருக்கும் தென்கலையாருக்கும் இடையில் சண்டைகள் தோன்றியது எப்போது என்று கூறமுடியுமா?**

ப: தென்மொழிக்கு முக்யத்வம் அளித்தவர்களுக்கும் வடமொழிக்கு முக்யத்வம் அளித்தவர்களுக்கும் இடையே சில அபிப்ராய பேதங்கள் முற்காலத்திலேயே இருந்தது உண்மைதான். ஆனால் அவை தற்போது காணப்படும் வழக்குகளைப் போல் இருக்கவில்லை. அறிவாளிக்குள் ஏற்படும் விவாதமாகவே (Intellectual Debate) ஆக இருந்தது. 17ம் நூற்றாண்டில் வசித்த அரசாணிபாலை வெங்கடாத்வரி என் பவர் ஸ்ரீ வைஷ்ணவ சமுதாயம், கோவில்கள் இவற்றில் தாம் கண்ட குறை நிறைகளை விச்வகுணாதர்சம் என்ற நூலில் விவரிக் கிறார் அதில் வடமொழிக்கு ஏற்றமளிப்பவர்கள் திவ்யப் பிரபந்தங்களுக்கு ஏற்றமளிப்பவர்கள்-இவர்களிடையே சடங் குகளில் தாம் கண்ட வித்தியாசங்கள் முதலியவைகளை விவரிக்கிறாரே ஒழிய, கோவில்களில் சண்டை சச்சரவுகளைப் பற்றியோ, திவ்யபிரபந்தம் ஓதுவதிலேயே வித்தியாசங் களையோ, நாமத்தில் வித்தியாசத்தையோ குறிப்பிடவில்லை என்று வித்வான்கள் எனக்கு எடுத்துக் காட்டி இருக்கிறார்கள்.

சாதாரண ஸ்ரீவைஷ்ணவர்களிடமோ கோயில் களுக்குள்ளோ தென்கலை, வடகலைச் சண்டைகளே கி.பி. 1700க்கு முன்பு கிடையவே கிடையாது. முதன் முதலில் தென்கலை வடகலை சச்சரவுகள் ஆரம்பித்தது. கி.பி 1711க்குப் பிறகுதான், ஒரு அனுபவமுள்ள வக்கீல் என்ற முறையில், இதற்கு முன்பு வடகலை தென்கலை சச்சரவுகள் நடந்ததாகவோ நடந்ததற்கான ரிகார்டுகள் உள்ளதாகவோ இல்லை என்பதை நான் நிச்சயமாகக் கூறுகிறேன். ஆக எனக்கு தெரிந்து ரிகார்டு மூலமாக கோயில் சச்சரவுகள் முதன் முதலில் ஏற்பட்டது 1711க்குப் பிறகுதான்.

(மீதி அடுத்த இதழில்)

## முக்கிய அறிவிப்பு

கீழ்கண்ட எண்களையுடைய சந்தாதாரர்களின் சந்தா இந்த இதழுடன் முடிவடைகிறது. உடனே அவர்கள் தங்கள் சந்தாப் பணத்தைச் (ரு 10/-) செலுத்தி புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**1 to 134, 136 to 211, 213 to 235, 237 to 259, 261 to 263, 265 to 268, 273, 289, 294, 300 to 328, 330 to 343, 354, 383.** (அவரவர்கள் தங்கள் தங்கள் சந்தா எண்களை இம்மாத கீதாசார்யன் உறையில் காணலாம்) சந்தா செலுத்தும் போது உங்கள் சந்தா எண்களைத் தவறாமல் குறிப்பிடுங்கள்.

# கண்ணன் பிள்ளைத்தமிழ்

## மோஹன திருமலை

தமிழ் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று பிள்ளைத்தமிழ் என்பது. தலைவன் அல்லது தலைவியின் பிள்ளைப் பருவ விளையாட்டுக்களை வருணிக்கும் சிற்றிலக்கியமாகும் இது. **'குழவி மருங்கினும் கிழவதாகும்'** என்பது தொல்காப்பிய சூத்திரம்.

தமிழில் முதன்முதல் தோன்றிய பிள்ளைத்தமிழ் நம் பெரியாழ்வாரின் கண்ணன் பிள்ளைத்தமிழாகும். இலக்கண வரையறைக்கு உட்பட்டு இவர் இயற்றவில்லை யெனினும் முதன்முதல் தோன்றிய பிள்ளைத்தமிழ் இதுவே.

தாமே யசோதையாக மாறி, யசோதை எவ்வாறு தன் குலக்கொழுந்தின் சேட்டிதங்களை, லீலா விநோதங்களை அனுபவிப்பாளோ, தன் தோழிகளையும் அழைத்துக் கூறுவாளோ அவ்வாறே ஆழ்வாரும் யசோதையின் கண்களால் அனுபவிக்கிறார். தாம் கண்ட அழியா அழகைப் பிறருக்கும் 'காணீர்! காணீர்!' என்று காட்டுகிறார். நாமும் அனுபவிப்போம் வாருங்கள்!

குழந்தைக்கு நீராட்டுகிறாள் யசோதை. கொப்பரையில் வாசனைத் திரவியங்களும், மருந்துகளும் இட்டுக் காய்ந்த குளிர்ந்த தண்ணீர் இருக்கிறது. பசுமஞ்சள் உரைத்துப் பூசிப் பைய நீராட்டுகிறாள். பிறகு நாக்கு வழிக்கத் தொடங்குகிறாள். பவளம் போன்ற வாயைத் திறக்கிறது குழந்தை. என்னே! அதிசயம்! சகல லோகங்களையும் காண்கிறாள் தாய் பிள்ளையின் வாய்க்குள்ளே!

கையும் காலும் நிமிர்த்துக் கடாரநீர்
பைய ஆட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்
ஐய ! நாவழித் தாளுக் (கு)அங் காந்திட
வையம் ஏழும்கண் டான்பிள்ளை வாயுளே !

பிறகு அந்த அழகனை, மாணிக்கம் கட்டி வயிரம் இடை கட்டி ஆணிப் பொன்னால் செய்த வண்ணச் சிறுத்தொட்டிலில் கிடத்தி,

ஐயா, அழேல் ! அழேல் ! தாலேலோ !
அரங்கத்து அணையானே ! தாலேலோ

என்று சீராட்டித் தாலாட்டுகிறார்.

இவ்வளவு தாலாட்டியும் குழந்தையின் அழுகை நிற்க வில்லை. உடனே 'அம்புலி' காட்டுவதற்காகக் குழந்தையை ஒக்கலில் எடுத்துக் கொண்டு கிளம்பி விடுகிறார் நிலாமுற்றத் திற்கு பெரியாழ்வார் என்ற யசோதை !

சந்திரனைக் கண்டதும் குழந்தை கிருஷ்ணனும் தன் அழுகையை மறந்து, 'வா ! வா !' என்று மழலை முற்றாத இளஞ்சொல்லால் அழைக்கின்றான். ஆயினும் மேகத்துள் மறைந்த சந்திரன் வெளியில் வரக் காணோம் ! சிறு குழந்தை தானே என்று சந்திரன் நினைக்கிறான் போலும் தன் குழந்தையை என்று தோன்றுகிறது தாயான பெரியாழ் வாருக்கு,

சிறியனென்று என்இளஞ் சிங்கத்தை
இகழேல் கண்டாய்,
சிறுமையின் வார்த்தையை
மாவலியிடம் சென்று கேள் !

என்கிறார், வாமனனும் வந்து குஞ்சக்காலால் மூவடி மண் கேட்டவன் படுத்திய பாட்டை நீ அறியாயோ ? என்று நயம் பட எடுத்துரைக்கின்றார்.

குழந்தை தனது இரண்டு கைகளையும், முழந்தாளையும் ஊன்றித் தலையை நிமிர்த்தி ஆடுகிறது.

ஆளவெ ணக்கொருகா லாடுக செங்கீரை
ஆயர்கள் போரேரே ஆடுக ஆடுகவே

என்று குன்றமேந்திக் குளிர்மழை காத்த கிருஷ்ணனை அசைந்து ஆடும்படி வேண்டுகிறார்.

அடுத்து, கைகொட்டி விளையாடும் சப்பாணிப் பருவத்துக் கிருஷ்ணனை நோக்கி,

புட்டியிற் சேறும் புழுதியும் கொண்டு வந்து,
அட்டி யமுக்கி யகம்புக் கறியாமே,
சட்டித் தயிரும் தடாவெனில் வெண்ணெயுமுண்
பட்டிக் கன்றே! கொட்டாய் சப்பாணி
பற்பநாபா கொட்டாய் சப்பாணி.

என்று கூறுமுகமாக கிருஷ்ணனின் லீலா விநோதங்களை எவ்வளவு பிரத்யட்சமாகப் பார்த்து விடுகிறார் தம் மனோ பாவத்தால் யசோதையாக மாறிப் பிறக்கும் பெயாழ்வார்.

பின்பு தளர்நடை பயிலும் கிருஷ்ணனை உண்ணவும், நீராடவும், அலங்கரித்துக் கொள்ளவும் முறையே, அம்மம் உண்ண வாராய் என்றும், மஞ்சனம் ஆடநீ வாராய் என்றும்,

தேனில் இனிய பிரானே!
செண்பகப் பூச்சூட்ட வாராய்.

என்றும் பலவாறு அழைக்கிறாள் யசோதை

துஷ்டப் பிள்ளைகளுடன் பேசாதே வீண்பழி வரும் என்று அறிவுரை கூறவந்த யசோதை—

பல்லாயிரவர் இவ்வூரில் பிள்ளைகள்
தீமைகள் செய்வார்
எல்லாம் உன்மேலன்றிப் போகாது,
எம்பிரான் நீ இங்கே வாராய்!

என்று கூறி அழைக்கிறாள்.

குழந்தை கிருஷ்ணனை நன்கு சீவி முடித்து பூச்சூட்டி சிங்காரித்துக் கையில் கோல் கொடுத்து ஆனிரை மேய்க்க அனுப்புகிறாள் யசோதை. பிறகு, "ஐயோ! அவனைப் போக விட்டேன் நானே!" என்று வருந்துகிறாள்.

பெரியாழ்வாரின் 'கண்ணன் பிள்ளைத்தமிழை' ஓதும் பொழுது ஆழ்வாரைப் போன்று நாமும் யசோதையாய் மாறி விடுகிறோம் என்பதில் சிறிதும் ஐயமில்லை!

—o—

PHONE : 442407
VUMMIDI
Bangaru Chetty Trust
JEWELLERS
and
DIAMOND
MERCHANTS
vbc
PANAGAI PARK
MADRAS - 600 017

# ஸ்ரீ பாஷ்ய ஸாரம்

கார்யபரமான வாக்யத்திலிருந்தே சக்திக்ரஹணை முண்டாகிறதென்பதும் மிகவும் தவறு. 'தேவத்தா ! உனக்குப் பிள்ளை பிறந்தது' என்பதாக ஒரு வாக்கியத்தை எடுத்துக் கொள்வோம். இது ஸித்தார்த்த பரமான வாக்கியமே யொழிய 'காமாநய, காம் நய' இத்யாதி வாக்யங்கள் போல கார்யபரவாக்கியமன்று. இந்த வாக்யத்தினாலும் சிறுவர் களுக்கு வ்யுத்பத்தி விளையக் காணாநின்றோம். தேவத்தத் தனுக்குப் பிள்ளை பிறந்தவுடனே வேறோரிடத்திலிருந்த அவனுக்கு இதைத் தெரிவிப்பதற்காக ஏவப்பட்டவொருவன் 'தேவத்தா ! புத்ரஸ்தே ஜாத :' என்கிறான், அவ்யுத்பந்நனான

P.B. அண்ணங்கராசாரியர்

வொருவன், தேவத்தனுடைய க்ருஹத்தில் அவனுக்குப் பிள்ளை பிறந்ததையும் அதைத் தெரிவிப்பதற்காக வொருவன் ஏவப் பட்டதையும் அவன் கூறினதைக் கேட்டு தேவத்தத்தனுக்கு முகவிகாஸமுண்டானதையும் நோக்கி "புத்ரஸ் தே ஜாத :" என்ற வாக்யத்திற்கு இன்னது பொருளென்று உணர்ப்பெறு கிறான். ஆகவே கார்யபரமான வாக்யத்திலிருந்தே சக்தி க்ரஹணை மென்கிற நியதி இல்லையென்றதாயிற்று. சிலவிடங் களில் ஸித்தபரமான வாக்யத்திலிருந்தும் கார்ய அநந்வித வஸ்துக்களில் சக்திக்ரஹணை முண்டாகிறது; சிலவிடங்களில் கார்யபர வாக்யத்திலிருந்தும் உண்டாகிறது என்று

லோகாநுபவத்தினுல் ஸித்திக்கிறபடியால் ப்ராபாகரர்கள் ஸகல பதங்களும் கார்யார்த்த பரங்களென்று கூறுவது யுக்தி யற்றதென்று தேறிற்று. ஆகவே, வாக்யங்களுக்கு ஸித்த ரூபமான ப்ரஹ்மத்தில் தாத்பர்யம் ஸம்பவிக்கலா மாகையாலே தத்விசார சாஸ்த்ரம் ஆரம்பிக்கத்தக்கதே யென்று ஸித்தாந்தமானதாக முடிந்தது.

இங்கு இப்படிப்பட்ட பூர்வபக்ஷம் தோன்றி இதற்குப் பரிஹாரம் செய்வதாகிற விஷயம் இந்த ஸூத்ரத்தில் எங்ஙனம் கிடைக்கிறதென்று கேள்வி தோன்றும். கார்யத்தில் அந்வயியாத ப்ரஹ்மமாகிற ஸித்தவஸ்துவை ஜிஜ்ஞாஸ்யமாக இங்குக் கூறியிருப்பதனுல் இதிலிருந்து இந்த பூர்வபக்ஷ ஸித்தாந்தங்கள் நிர்ணயிக்கப்படக் குறையில்லை. வேதாந்த வாக்யங்களெல்லாம் கார்ய பரங்களாய்க் கொண்டு ப்ராமாண்யம் பெறுமேயல்லது ஸித்த பரங்களாய்க்கொண்டு ப்ராமாண்யம் பெறமாட்டாதென்கிற வாதம் ஸமஞ்ஜஸமா யிருந்தாலன்றோ வேதாந்த வாக்யங்களினுல் ஸித்தரூபமான ப்ரஹ்மத்தை விசாரிப்பது கூடாதென்று சொல்ல நேரும்.

முதலில் நாமெடுத்துக்காட்டிய பூர்வ மீமாம்ஸா ஸூத்ரங்களிரண்டினுலும் தேறின வர்த்தம் இப்போது விரோதிக்கிறதாக இனி நினைக்கக்கூடும். கார்யபரங்களல்லாத ஸித்த பர வாக்யங்களுக்கு ஸ்வாதந்த்ர்யேண ப்ராமாண்யம் அஸம்பாவிதமென்றன்றோ அங்கு ஸித்தாந்தம் செய்யப் பட்டிருக்கிறது — என்று சங்கிக்க நேரும். இந்த சங்கை வேண்டா. எல்லா வேத வாக்யங்களும் கார்யபரங்களாய்க் கொண்டே ப்ராமாண்யம் பெறுமென்று பூர்வபக்ஷி சொன்னதை அப்படியே ஒப்புக்கொண்டு அப்யுபகம்ய வாத முறையில் பரிஹாரம் காட்டினுர் ஜைமினிமஹர்ஷி. அதுவே அவருடைய அபிப்ராயமென்பது கிடையாது. கார்ய

பரமல்லாத அர்த்தவாத வாக்கியங்களும் விதிசேஷமாய்க் கொண்டு ப்ராமாண்யம் பெறுகின்றனவென்று சொன்னவனவால் ஸித்தபர வாக்யங்களுக்கு ப்ராமாண்யமே கிடையாதென்று சொன்னபடியாகாது. ஆகவே இந்த ஸூத்திரத்தில் செய்யப்படுகிற ஸித்தாந்தமானது பூர்வ மீமாம்ஸா அர்த்தவாதாதிகரண ஸித்தாந்தத்திற்கு விருத்தமன்று என்றதாயிற்று.

## —இனி ப்ரக்ருதஸூத்ரார்த்தவிசாரம்—

இதில் (அத அத:) என்கிற இரண்டு பதங்களினால் கர்ம விசாரத்திற்குப் பிறகு கர்மவிசாரம் முடிந்ததென்கிற காரணத்தாலேயே, ப்ரஹ்ம விசாரம் செய்யத்தக்கதென்று கிடைப்பதனால் ப்ரஹ்மவிசாரத்தைக் குறித்துக் கர்மவிசாரம் நியமேந பூர்வவ்ருத்தமென்று தேறுகின்றது. இதைப்பற்றியும் சிறிது விவரிக்கப்படுகிறது. வேதமோதினவொரு புருஷன் வேதவாக்யங்களில் கர்ம பலத்தைப் பற்றியும் ப்ரஹ்மஜ்ஞான பலத்தைப் பற்றியும் ஸ்திரமென்று சிலவிடங்களிலும் அஸ்திரமென்று சிலவிடங்களிலும் மேலெழுந்தவாரியாக வுணர்ந்து இவற்றில் எது உண்மையென்று நிர்ணயம் தெரிந்து கொள்ள விரும்புகிறான். அந்த விருப்பத்தினால் அதை நிர்ணயித்துத் தரக்கூடிய சாஸ்த்ரங்களில் ப்ரவர்த்திக்கிறான். கர்மபலனைப்பற்றின வுண்மையை நிச்சயித்துத் தரவல்ல சாஸ்த்ரங்களில் முந்துறமுன்னம் ப்ரவர்த்திக்கிறான். அநாதி வாஸநையினால் கருமங்களைச் செய்வது எளிதென்று பொதுவாகத் தோன்றியிருக்கும். ப்ரஹ்மஜ்ஞானத்தில் அப்யாஸமில்லாமையினாலே அது துஷ்கரமென்றும் தோன்றியிருக்கும். ஆகவே எளிதான உபாயத்தினால் அபிமதம் கைபுகுவதாயிருக்க அரிதான உபாயத்தில் ப்ரவ்ருத்தி ஸம்பவிக்கமாட்டாதாகையாலே ப்ரஹ்மஜ்ஞானத்தின்

பலனைப் பற்றி நிர்ணயிக்கவேணுமென்கிற விருப்பம் தடைபட்டு, கருமபலனைப் பற்றி நிர்ணயிக்கவேணுமென்கிற விருப்பமே தலையெடுத்திருக்கும். இங்ஙனம் முன்னம் கரும விசாரம் செய்தவளவில் கருமபலன்கள் அஸ்திரம் என்கிற நிச்சயமுண்டாகிறது. இப்படி நிச்சயமுண்டானவளவில், கர்ம விசாரேச்சை தொலைந்ததாகிறது; இந்த கர்ம விசாரேச்சையே முன்பு ப்ரஹ்ம விசாரேச்சைக்கு இடையூறுயிருந்ததனால் இந்த ப்ரதிபந்தகம் தொலையவே ப்ரஹ்ம விசாரத்தில் இச்சையும் அதில் ப்ரவ்ருத்தியும் அடுத்தபடியாக உண்டாகிறது. எனவே, ப்ரஹ்ம விசாரத்தைக் குறித்து கர்ம விசாரம் நியமேந அபேக்ஷிதமென்றதாகிறது. இதுவே பூர்வ வ்ருத்தமாக இருக்கத் தக்கதாதலால் (அத அத:) என்ற பதங்களுக்குப் பதவுரையில் கூறிய பொருளே பொருத்தமுடைத்தென்றதாயிற்று.

....•

With best wishes of :

# UDIPI HOME

**BOARDING AND LODGING**

**(Near Egmore Automatic Signal Light)**

★

Telephone :
842083 (10 Lines)

Telegram :
"UDIPIHOME"

EGMORE — MADRAS-600 008

# அன்புள்ள கீதாசார்யரே!

**கிருஷ்ணஸ்வாமி** பொன் களத்தூர்.

ஆவணி இதழில் நா. பார்த்தசாரதியின் கட்டுரை மிகவும் அற்புதமாக இருந்தது. தமக்கே உரியபாணியில், அவர் தற்காலப் படிப்புக்கு திவ்யப்ரபந்தம் அவசியம் வேண்டும் என்று கூறியதை நாங்கள் மனமுவந்து வரவேற்கிறோம். ஆவன செய்யுங்கள்.

**பாபு,** சென்னை.

தற்காலப் படிப்பில் திவ்யப்ரபந்தத்தின் நிலைபற்றி நீபம் பார்த்தசாரதி அவர்கள் சுட்டிக் காட்டியது முற்றிலும் உண்மை. ஆனால், இவற்றை நமது பத்திரிகைகளில் மட்டும் எழுதினால் போதாது மிகவும் பிரபலமாகவுள்ள மற்ற பத்திரிகைகளிலும் இதை எழுதி யாவரும் உணரும்படி செய்ய வேண்டும்.

**ராஜகோபாலன்** பாம்பே.

சென்ற மாதம் அட்டைப்படம் வெகுஜோர். திருநீர்மலை முழுவதையும் மட்டுமல்லாமல் நீர்வண்ணனையும் உமது அட்டைக்குள் அடக்கி விட்டதற்குப் பாராட்டுக்கள். அட்டையின் இரண்டுபுறமும் படங்கள் இருந்ததால் மிக நன்றாக இருக்கிறது.

**T. A. பாஷ்யம்,** சென்னை-1

சென்ற மாதம் எனது 'திருநீர்மலை' கட்டுரையில் (பக்கம் 42ல்) ஈடு உத்ஸவம் ஆனித் திருமூலத்தன்று முதல் 3 நாட்கள் நடைபெறுவதாக அச்சாகியிருக்கிறது. அது தவறு. ஆனி அனுஷம் முதல் ஆனித் திருமூலம் வரை 3 நாட்கள் ஈடு உத்ஸவம் நடைபெறுகிறது என்றுதான் நான் எழுதியிருந்தேன். (தவறாக பிரசுரித்து விட்டமைக்கு வருந்துகிறோம். ஆ—ர்).